GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL,
PERUNDURAI.R.S
PH : 9486379461, 8344933377

No. of Printed Pages : 8

பதிவு எண் | 1 | 2 | th | 2 | 0 | 2 | 0 |

# பகுதி I – பொதுத் தமிழ்

# Language – Part I – TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும், அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **14x1=14**

**1.** சிற்பி பாலசுப்பிரமணியத்தின் ‘இளந்தமிழே’ பாடல் இடம் பெற்ற நூல் :

(அ) மஸ்னவி (ஆ) நிலவுப் பூ

(இ) காவ்யதர்சன் (ஈ) துறைமுகம்

**2.** ‘‘காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை’’

- இந்தத் தொடரில் ‘கலன்’ என்ற சொல்லின் பொருள்.

(அ) வேளாண் கருவி (ஆ) போர்க் கருவி

(இ) தச்சுக் கருவி (ஈ) இசைக் கருவி

[ திருப்புக

3. மாதவி பெற்ற பட்டம் :

(அ) நாட்டியப் பேரொளி (ஆ) நர்த்தகி
(இ) தலைக்கோலி (ஈ) நாட்டியமயூரி

4. புயலுக்குப் பெயர் வைக்கும் கூட்டமைப்பு நாடுகள் :

(அ) பத்து நாடுகள் (ஆ) எட்டு நாடுகள்
(இ) ஐந்து நாடுகள் (ஈ) பதினெட்டு நாடுகள்

5. த.ந. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் :

(அ) கிறித்தவமும் தமிழும் (ஆ) பௌத்தமும் தமிழும்
(இ) இசுலாமும் தமிழும் (ஈ) சமணமும் தமிழும்

6. இராமலிங்க அடிகள் இயற்றிய நூல் :

(அ) திருவருட்பா (ஆ) திருவாசகம் (இ) திருக்குறள் (ஈ) திருமந்திரம்

7. 'காய்நெல்' - இச்சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு :

(அ) உம்மைத்தொகை (ஆ) பண்புத்தொகை
(இ) வினைத்தொகை (ஈ) உவமைத்தொகை

8. முதல் கல் - என்னும் சிறுகதையின் ஆசிரியர் :

(அ) குலோத்துங்கச் சோழன் (ஆ) உத்தம சோழன்
(இ) இராசராச சோழன் (ஈ) இராசேந்திர சோழன்

9. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்
(ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது
(இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது
(ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL,
PERUNDURAI.R.S
PH : 9486379461, 8344933377

10. சுரதா நடத்திய கவிதை இதழ் :
(அ) விண்மீன் (ஆ) இலக்கியம் (இ) காவியம் (ஈ) ஊர்வலம்

11. 'பொய்யா வானம்' - இலக்கணக் குறிப்பு தருக.
(அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
(ஆ) வினைத்தொகை
(இ) உரிச்சொல் தொடர்
(ஈ) பெயரெச்சத் தொடர்

12. அருங்கானம் - புணர்ச்சி விதி தருக.
(அ) ஈறுபோதல், தன் ஒற்று இரட்டல்
(ஆ) ஈறுபோதல்
(இ) ஈறுபோதல், இனமிகல்
(ஈ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்

13. மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது ?
(அ) தொன்மம் (ஆ) குறியீடு (இ) படிமம் (ஈ) அங்கதம்

14. காப்பியம் எத்தனை வகைப்படும் ?
(அ) மூன்று (ஆ) இரண்டு (இ) நான்கு (ஈ) ஐந்து

## பகுதி - II

## பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. 3x2=6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?

16. விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு நடுங்கியதாக நக்கீரர் கூறுகிறார் ?

17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.

18. வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு யாது ?

[ திருப்புக

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL,
PERUNDURAI.R.S
PH : 9486379461, 8344933377

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. **2x2=4**

**19.** புக்கில், தன்மனை - சிறு குறிப்பு வரைக.

**20.** சென்னையை அலங்கரித்த ஆறுகளை எழுதுக.

**21.** பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும் ? சான்று தருக.

## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. **7x2=14**

**22.** பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

(அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ.

(ஆ) ஷூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு ?

**23.** கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும், சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

(அ) முன் < (ஆ) தானே <

**24.** பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.

தின்மை - திண்மை

**25.** தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

(அ) பனைமட்டையில் கூரை வைத்திருந்தனர்.

(ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.

**26.** உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக.

(அ) அச்சாணி இல்லாத தேர் போல

(ஆ) நகமும் சதையும் போல

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL,
PERUNDURAI.R.S
PH : 9486379461, 8344933377

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

(அ) நம் வாழ்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.

(ஆ) புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(அ) அமர்ந்தனன் (ஆ) செய்த

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

(அ) எத்திசை (ஆ) செந்தமிழே

30. ஈரசைச் சீர்கள் எத்தனை ? அவை யாவை ?

## பகுதி - III

## பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. 2x4=8

31. ''ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்''

- இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. அதிசயமலரில் பூச்செடி எவ்வாறு முளைத்துள்ளதாக தமிழ்நதி கூறுகிறார் ?

33. அதியமானின் ஈகைப் பண்பை சிறுபாணாற்றுப்படை வழிநின்று விளக்குக.

34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.

[ திருப்புக

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும்** விடை தருக. 2x4=8

35. கலைமுழுமை என்றால் என்ன ? விளக்குக.

36. பேரிடர் மேலாண்மை வாரியம் - விளக்குக.

37. சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. 3x4=12

39. ஏகதேச உருவக அணி (அல்லது) தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

41. அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக் கூறுவன யாவை ?

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

(அ) ஊழி பெயரினும் தாம் பெயரார்

**அல்லது**

(ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

43. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.

சங்க இலக்கியங்கள்

| எட்டுத்தொகை | | | பத்துப்பாட்டு | |
|---|---|---|---|---|
| அகம் | புறம் | அகமும் புறமும் | அகம் | புறம் |
| நற்றிணை<br>குறுந்தொகை<br>ஐங்குறுநூறு<br>அகநானூறு<br>கலித்தொகை | புறநானூறு<br>பதிற்றுப்பத்து | பரிபாடல் | குறிஞ்சிப்பாட்டு<br>முல்லைப்பாட்டு<br>நெடுநல்வாடை<br>பட்டினப்பாலை | மதுரைக்காஞ்சி<br>திருமுருகாற்றுப்படை<br>பொருநராற்றுப்படை<br>பெரும்பாணாற்றுப்படை<br>சிறுபாணாற்றுப்படை<br>கூத்தராற்றுப்படை |

## பகுதி - IV

3x6=18

44. (அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

**அல்லது**

(ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பர்' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. (அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) சங்ககால கல்வெட்டை அறிந்துகொள்ள புகளூர் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது ? விளக்குக.

[ திருப்புக

**46.** (அ) 'சாலை விபத்தில்லா தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை ?

**அல்லது**

(ஆ) 'நடிகர் திலகம்' என்ற பட்டம் சிவாஜிக்குப் பொருத்தமானதே என்பதை நிறுவுக.

## பகுதி - V

**47.** **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** **4+2=6**

(அ) ''துன்பு உளது...'' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(ஆ) ''செயல்'' என முடியும் குறள்.

- o O o -